பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
12. 08. 2024 7 .15
திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பாரீஸ் ஒலிம்பிக்போட்டியில் இந்திய வீரர்கள் தங்களது சிறப்பான பங்களிப்பை அளித்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. **Hindenburg** தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்துவதற்கு செபி அமைப்பு உத்தரவிட்டுள்ளது.

3. ஹரியானா சட்டப்பேரவைத் தேர்தலை நடத்துவதற்கான ஆலோசனைக் கூட்டம் தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ்குமார் தலைமையில் இன்று நடைபெறுகிறது.

4. யுக்ரைன் துருப்புகள் ரஷ்யாவில் 30 கிலோ மீட்டர் தொலைவிற்கு ஊடுருவி சில இடங்களைக் கைப்பற்றியுள்ளதாக யுக்ரைன் பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

5. பாரீசில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகள் வண்ணமிகு நிகழ்ச்சியுடன் நிறைவு பெற்றது.

*- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

பாரீசில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் இந்திய வீரர் - வீராங்கனைகள் சிறப்பான பங்களிப்பை வெளிப்படுத்தியுள்ளதாகவும், நாடே அவர்களின் திறமையைக் கண்டு பெருமிதம் கொள்வதாகவும் பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற அனைத்து இந்திய வீரர்களும் தங்களது திறமையை வெளிப்படுத்தியதாகவும், அடுத்து வரக்கூடிய விளையாட்டு நிகழ்ச்சிகளில் வெற்றிபெற தாம் வாழ்த்துவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவின் சார்பில் 16 பிரிவுகளில் பங்கேற்பதற்காக 117 பேர் கொண்ட குழுவினர் கலந்துகொண்டனர்.

<<<<>>>>

செபி என்று அழைக்கப்படும் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை அமைப்பு, அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல முதலீட்டு ஆராய்ச்சி நிறுவனமான **Hindenburg-**ன் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளது.

அதானி குழுமம் நிதி முறைகேட்டில் ஈடுபட்டதாக புகார் எழுந்ததையடுத்து, உச்சநீதிமன்றம் இதனை விசாரிப்பதற்கு செபி அமைப்பை கேட்டுக்கொண்டது.

இந்நிலையில் செபி அமைப்பின் தலைவர் திருமதி மாதாபி புரி புஜ் மற்றும் அவரது கணவர் தவால் புஜ் ஆகியோர் பல்லாயிரக்கணக்கான பங்குகளை வாங்கியிருந்ததாக ஹிண்டன்பர்க் தெரிவித்துள்ளது.

இதனால் அதானி குழுமத்திற்கு எதிராக செபி நிறுவனம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் குற்றம் சாட்டியுள்ளது.

இதனை மறுத்துள்ள செபி, இம்மாதிரியான குற்றச்சாட்டுகள் தவறானவை என்றும், செபி அமைப்பு இதுபோன்ற நடவடிக்கைகளை கண்காணிக்க ஏற்கனவே குழு ஒன்று உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

மேலும் செபி அமைப்பின் தலைவர் ஈடுபடக்கூடிய அனைத்துவிதமான நடவடிக்கைகளையும் வெளியிடுவது அவசியம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹிண்டன்பர்க் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகள் குறித்து முழு விசாரணை நடத்துவதற்கு செபி அமைப்பு தற்போது உத்தரவிட்டுள்ளது.

எனவே முதலீட்டாளர்கள் அமைதி காக்குமாறும், இதுபோன்ற தவறான செய்திகளால் குழப்பமடைய வேண்டாம் என்றும் செபி அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும் ஹிண்டன்பர்க் நிறுவனத்திற்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளதாகவும் கூறியுள்ளது.

பங்குச்சந்தை மற்றும் முதலீட்டாளர்களின் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சியில் செபி அமைப்பு தொடர்ந்து கவனம் செலுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மற்றும் கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் உதவிபுரிந்து வருவதாக மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

ஜம்மு-கஷ்மீர் உதம்பூரில் உள்ள செனானியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஸ்டார்ட்அப் நிறுவன பிரதிநிதிகளுடன் அவர் கலந்துரையாடினார்.

செயற்கை நுண்ணறிவு மூலம் இயக்கப்படும் டாக்டர் ஆன் வீல்ஸ் என்ற மருத்துவ சேவையையும் அவர் தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய அவர், தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம், பெண்கள் சுய உதவிக் குழுக்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு உதவுகிறது என்றும், உள்ளூர் இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தருவதாகவும் தெரிவித்தார்.

<<<<>>>>

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி அருகே சென்னை – திருப்பதி தேசிய நெடுஞ்சாலையில் நேற்று மாலை லாரியும், காரும் மோதிய விபத்தில் தனியார் கல்லூரியைச் சேர்ந்த 5 மாணவர்கள் உயிரிழந்தனர்.

ராமஞ்சேரி என்ற இடத்தில் கண்டெய்னர் லாரியும், காரும் நேருக்கு நேர் மோதியதால் இந்த விபத்து நேர்ந்ததாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

விபத்து ஏற்படுத்திய கண்டெய்னர் லாரியை பறிமுதல் செய்து கனகம்மா சத்திரம் காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த விபத்தில் உயிரிழந்த மாணவர்கள் 5 பேர் ஆந்திர மாநிலம் ஒங்கோல் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், இவர்கள் சென்னை அருகேயுள்ள தனியார் பொறியியல் கல்லூரியில் 3ஆம் ஆண்டு படிக்கும் மாணவர்கள் என்றும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து காரணமாக சென்னை – திருப்பதி நெடுஞ்சாலையில் 2 மணி நேரத்திற்கும் மேலாக கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

<<<<>>>>

நேபாள நாட்டிற்கு இரண்டு நாள் பயணமாக சென்றுள்ள வெளியுறவுத்துறை செயலாளர் திரு. விக்ரம் மிஸ்ரி அந்நாட்டு அதிபர் திரு. ராமச்சந்திர பவுடெல், பிரதமர் கே.பி. ஷர்மா ஒலி ஆகியோரை சந்தித்துப் பேசினார்.

இந்தியா – நேபாளத்திற்கு இடையிலான உறவுகள் குறித்து இரு தலைவர்களுடன் விரிவாக விவாதித்தார்.

குறிப்பாக பருவகால மாற்றம், உலக வெப்பமயமாதல் ஆகிய பிரச்சினைகளில் இரு நாடுகளும் எடுக்க வேண்டிய கூட்டு நடவடிக்கை குறித்து விவாதித்தனர்.

நேபாள பிரதமர் திரு. கே.பி. ஷர்மா ஒலியுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் இரு நாடுகளுக்கு இடையிலான மக்கள் தொடர்பு கலாச்சாரம் மற்றும் பொருளாதார உறவுகள் குறித்து விவாதித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நேபாள நாட்டின் நிதியமைச்சர், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர், வெளியுறவுத்துறை அமைச்சர் ஆகியோரை சந்தித்துப் பேசுகிறார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களுடன் மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் வரும் 25ஆம் தேதி ஒலிபரப்பாகிறது.

இது 113வது நிகழ்ச்சியாகும். இந்த நிகழ்ச்சியில் மக்கள் தங்களது ஆலோசனைகளையும், கேள்விகளையும் அனுப்பலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக இலவச தொலைபேசி எண் அறிவிக்கப்பட்டுள்ளது.

1 8 0 0 – 1 1 – 7 8 0 0 என்ற எண்ணிலும் தொடர்புகொள்ளலாம்.

மேலும் நமோ செயலி, **mygov open forum** ஆகியவற்றிலும் தங்களது கருத்துகளை வரும் 23ஆம் தேதி வரை பதிவு செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியை அகில இந்திய வானொலி, டிடி நியூஸ், பிரதமர் அலுவலகம், தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் யூ டியூப் சானல்களிலும் கேட்கலாம்.

<<<<>>>>

யுக்ரைன் துருப்புகள் ரஷ்யாவில் 30 கிலோ மீட்டர் தொலைவிற்கு ஊடுருவி சில இடங்களைக் கைப்பற்றியுள்ளதாக யுக்ரைன் பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் **Kursk** பகுதியில் கடந்த 6 நாட்களாக யுக்ரைன் ராணுவம் முன்னேறிச் செல்வதாகவும், அங்குள்ள பல இடங்களைக் கைப்பற்றியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

**Guevo** கிராமத்தில் உள்ள ரஷ்ய நிர்வாக அலுவலகத்தில் ஏற்றப்பட்டிருந்த ரஷ்ய கொடியினை நீக்குவது போன்ற வீடியோவை யுக்ரைன் ராணுவம் வெளியிட்டுள்ளது.

இதற்கிடையே யுக்ரைன் ராணுவ வீரர்களின் ஊடுருவலை ரஷ்ய ராணுவம் முறியடித்துள்ளதாக ரஷ்ய பாதுகாப்புத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

ராஜஸ்தானில் கடந்த சனிக்கிழமை முதல் பெய்து வரும் தொடர் கனமழை காரணமாக அங்கு மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

ஜெய்ப்பூர், **Karauli, Sawai Madhopur, Dausa** ஆகிய இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த கனமழை காரணமாக இதுவரை 20 பேர் உயிரிழந்துள்ளதாக ராஜஸ்தான் மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதற்கிடையே அடுத்த 24 மணி நேரத்திற்கு கனமழை பெய்வதற்கு வாய்ப்பிருப்பதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அம்மாநில முதலமைச்சர் திரு. பஜன்லால் ஷர்மா உயர் அதிகாரிகளுடன் அவசர ஆலோசனை நடத்தினார்.

அப்போது மீட்பு பணிகள் மற்றும் நிவாரணப் பணிகளை துரிதப்படுத்துமாறு அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

அசாம், மேகாலயா, பீஹார், கிழக்கு ராஜஸ்தான் ஆகிய பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கேரளா, மாஹே, தமிழ்நாடு, வடக்கு கர்நாடகா பகுதிகளில் அடுத்த 4 நாட்களுக்கு ஒருசில இடங்களில் கனமழை பெய்வதற்கான வாய்ப்பிருப்பதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

கிழக்கு மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் பரவலாக மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஹரியானாவில் நடைபெற உள்ள சட்டப்பேரவை தேர்தலுக்கான முன் தயாரிப்பு பணிகள் குறித்து ஆய்வு செய்வதற்காக தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ் குமார் தலைமையிலான குழு இரண்டு நாள் பயணமாக இன்று ஹரியானா மாநிலத்திற்கு செல்கிறது.

ஹரியானா மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. பங்கஜ் அகர்வாலுடன் இன்று ஆலோசனை நடைபெறுகிறது.

மேலும் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள், மாவட்ட தேர்தல் அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகளுடன் இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது.

நாளை அம்மாநில தலைமைச் செயலாளர், காவல்துறை இயக்குநர், நிர்வாகத்துறையைச் சேர்ந்த அதிகாரிகள் ஆகியோருடன் தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ்குமார் ஆலோசனை நடத்துகிறார்.

<<<<>>>>

பாரீசில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகள் நிறைவு பெற்றன.

நேற்றிரவு நடைபெற்ற வண்ணமிகு நிறைவுநாள் நிகழ்ச்சியில் உலக நாடுகளைச் சேர்ந்த தலைசிறந்த விளையாட்டு பிரபலங்கள் மற்றும் ஹாலிவுட் பிரபலங்களும் கலந்துகொண்டனர்.

மேற்கத்திய இசைக் கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகள், ஆடல் பாடல்களுடன் நடைபெற்றது.

இந்த நிறைவு நிகழ்ச்சியின் போது நடைபெற்ற வீரர்கள் அணிவகுப்பில், இந்தியாவின் தேசியக்கொடியை மனுபாக்கரும், **Sreejesh-**ம் ஏந்திச் சென்றனர்.

இந்தப் போட்டியில் 40 தங்கம், 44 வெள்ளி, 42 வெண்கலம் உட்பட மொத்தம் 126 பதக்கங்களுடன் அமெரிக்கா முதலிடம் பிடித்துள்ளது.

40 தங்கம், 27 வெள்ளி, 24 வெண்கலம் உட்பட மொத்தம் 91 பதக்கங்களுடன் சீனா இரண்டாம் இடத்தையும், 20 தங்கம், 12 வெள்ளி, 13 வெண்கலம் உட்பட 45 பதக்கங்களுடன் ஜப்பான் 3ஆம் இடத்தையும் பிடித்துள்ளது.

இந்தியா ஒரு வெள்ளி, 5 வெண்கலப் பதக்கம் உட்பட மொத்தம் 6 பதக்கங்களுடன் 71வது இடத்தில் உள்ளது.

**<<<<the end>>>>**